# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றம்

# 1986 ஆம் ஆண்டின் 3 ஆம் இலக்க, திரைப்படக் கலைஞர்களுக்கும் தொழில் நுட்பவியலாளர்களுக்குமான தேசிய திரைப்படக் கூட்டுத்தாபன நம்பிக்கைப் பொறுப்புச் சட்டம்

*[1986 பெப்ருவரி மாதம் 18 ஆந் தேதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது.]*

*அரசினர் ஆணைப்படி அச்சிடப்பட்டது.*

1986 பெப்ருவரி மாதம் 21 ஆந் தேதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையின் II ஆம் பகுதிக்குக் குறைநிரப்பியாக வெளியிடப்பட்டது.

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.

கொழும்பு அரசாங்க வெளியீட்டலுவலகத்திற் பெற்றுக்கொள்ளலாம்.

விலை : சதம் 90 தபாற் செலவு : சதம் 75

## 1986 ஆம் ஆண்டின் 3 ஆம் இலக்க, திரைப்படக் கலைஞர்களுக்கும் தொழில்நுட்பவியலாளர்களுக்குமான தேசிய திரைப்படக் கூட்டுத்தாபன நம்பிக்கைப்பொறுப்புச் சட்டம்

*[1986 பெப்ருவரி மாதம் 18 ஆந் தேதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது.]*

ச. வ—ஓ. 8/83
1711

திரைப்படக் கலைஞர்களுக்கும் தொழில்நுட்பவியலாளர்களுக்குமான தேசிய திரைப்படக் கூட்டுத்தாபன நம்பிக்கைப்பொறுப்பு ஒன்றினைத் தாபிப்பதற்கு ஏற்பாடு செய்வதற்கும், அதன் குறிக்கோள்களையும் தத்துவங்களையும் குறித்துரைப்பதற்கும் அத்துடன் அதனோடு தொடர்புபட்ட அல்லது அதன் இடைநேர்விளைவான கருமங்களுக்கு ஏற்பாடு செய்வதற்குமானதொரு சட்டம்.

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக :—

சுருக்கப் பெயர்.

**1.** இச்சட்டம், 1986 ஆம் ஆண்டின் 3 ஆம் இலக்க, திரைப்படக் கலைஞர்களுக்கும் தொழில்நுட்பவியலாளர்களுக்குமான தேசிய திரைப்படக் கூட்டுத்தாபன நம்பிக்கைப்பொறுப்புச் சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம்.

திரைப்படக் கலைஞர்களுக்கும் தொழில்நுட்பவியலாளர்களுக்குமான தேசிய திரைப்படக் கூட்டுத்தாபன நம்பிக்கைப் பொறுப்பைத் தாபித்தல்.

**2.** (1) திரைப்படக் கலைஞர்களுக்கும் தொழில்நுட்பவியலாளர்களுக்குமான தேசிய திரைப்படக் கூட்டுத்தாபன நம்பிக்கைப்பொறுப்பு என அழைக்கப்பட வேண்டியதான (இதனைத் தொடர்ந்து பின்னர் "நம்பிக்கைப் பொறுப்பு" எனக் குறிப்பிடு செய்யப்படும்) நம்பிக்கைப் பொறுப்பொன்று தாபிக்கப்படுதல் வேண்டும்.

(2) நம்பிக்கைப்பொறுப்பானது (1) ஆம் உட்பிரிவில் அதற்குக் குறித்தொதுக்கப்பட்ட பெயர்கொண்டு கூட்டிணைக்கப்பட்ட குழுவொன்றாதல் வேண்டும் என்பதுடன், இடையறா வழியுரிமையும் பொது இலச்சினையொன்றையும் கொண்டிருத்தலும் வேண்டும், அத்துடன் அப்பெயர் கொண்டு அது வழக்குத் தொடுக்கலாம் என்பதுடன் அதற்கெதிராக வழக்குத் தொடுக்கவும்படலாம்.

நம்பிக்கைப் பொறுப்பின் நம்பிக்கைப் பொறுப்பாளர் சபை.

**3.** (1) நம்பிக்கைப்பொறுப்பின் நிருவாகமும், முகாமையும் கட்டுப்பாடும் இதனகத்துப்பின்னர் ஏற்பாடு செய்யப்பட்டவாறு அமைக்கப்பட்ட ஒரு நம்பிக்கைப்பொறுப்பாளர் சபைக்கு உரித்தாக்கப்படுதல் வேண்டும்.

(2) இதனகத்துப்பின்னர் "சபை" எனக் குறிப்பிடுசெய்யப்படும் நம்பிக்கைப்பொறுப்பின் நம்பிக்கைப்பொறுப்பாளர் சபை பின்வருபவர்களைக் கொண்டிருத்தல் வேண்டும் :—

(அ) திரைப்படக் கூட்டுத்தாபனத்தின் தவிசாளர் ; இவர் சபையின் தவிசாளராக இருத்தல் வேண்டும் ;

(ஆ) திரைப்படக் கூட்டுத்தாபனத்தின் பொது முகாமையாளர் : அத்
[illegible]

**(இ)** இதனகத்துப்பின்னர் " நியமிக்கப்பட்ட உறுப்பினர்கள் " எனக் குறிப்பிடு செய்யப்படும் வேறு ஐந்து உறுப்பினர்கள் ; இவர்கள் அமைச்சரால் நியமிக்கப்படுதல் வேண்டும் ; இவர்களுள்—

**(i)** திரைப்படக் கூட்டுத்தாபனத்தின் இரண்டு பணிப்பாளர்களுள் முறையே உறுப்பினராகவும் மாற்றுன உறுப்பினராகவும் நியமனத்தின் செயற்பாட்டில் பதவிப்பெயர் பெறப்பட வேண்டியவரான ஓர் உறுப்பினர் முதலாவதாக பெயர் குறிப்பிடப்பட்ட பணிப்பாளராக அல்லது அவர் இல்லாதவிடத்து இரண்டாவதாக பெயர் குறிப்பிடப்பட்ட பணிப்பாளராக இருத்தல் வேண்டும் ;

**(ii)** ஓர் உறுப்பினர், பொதுத் திறைசேரியின் பிரதிநிதி ஒருவராதல் வேண்டும் ; அத்துடன்

**(iii)** மூன்று உறுப்பினர்கள், திரைப்படக் கைத்தொழிலிலிருந்து முறையே திரைப்படக் கலைஞர்களையும் திரைப்படத் தொழில்நுட்பவியலாளர்களையும் அத்துடன் திரைப்பட இயக்குநர்களையும் பிரதிநிதித்துவப்படுத்தும் ஆட்களாதல் வேண்டும்.

(3) அமைச்சர், அவ்வாறு செய்வது உசிதமானதெனக் கருதினால், அதற்கான காரணம் எதுவும் காட்டாது நியமிக்கப்பட்ட உறுப்பினர் எவரையும் பதவியினின்று அகற்றலாம் ; அத்துடன் அத்தகைய அகற்றுகையொறுவும் எந்நீதிமன்றத்திலும் கேள்விக்குட்படுத்தப்படுதலாகாது.

(4) சபையின் நியமிக்கப்பட்ட உறுப்பினரெவரும் அமைச்சருக்கு முகவரியிட்டனுப்பப்பட்ட எழுத்திலான கடிதமூலம் அவரது பதவியை எந்நேரத்திலும் துறக்கலாம்.

(5) சபையின் நியமிக்கப்பட்ட உறுப்பினர் ஒருவர், உடல்நலமின்மை காரணமாக, வேறு இயலாமை காரணமாக, இலங்கையில் இல்லாமை காரணமாக அல்லது வேறு காரணத்திற்காக அவரது பதவிக்குரிய கடமைகளைப் புரிவதற்கு தற்காலிகமாக இயலாதவராக இருப்பின் அவரது இடத்தில் செயலாற்றுவதற்கென அமைச்சர் (2) ஆம் உட்பிரிவின் (இ) என்னும் பந்தியின் ஏற்பாடுகளைக் கருத்திற்கொண்டு இன்னோர் ஆளை நியமிக்கலாம்.

(6) சபையின் நியமிக்கப்பட்ட உறுப்பினர் ஒவ்வொருவரும் முன்னரே அவர் பதவியை வறிதாக்கினாலன்றி, மூன்றாண்டுகளைக் கொண்டவொரு காலப்பகுதிக்குப் பதவிவகித்தல் வேண்டும்.

ஆயினும், சபையின் நியமிக்கப்பட்ட உறுப்பினரொருவரின் பதவியில் வெற்றிடமொன்றை நிரப்புவதற்கென அமைச்சரால் நியமிக்கப்படும் உறுப்பினர் ஒருவர், அவர் முன்னரே பதவியை வறிதாக்கினாலன்றி, அவர் எவ்வுறுப்பினரை அடுத்துறுகின்றாரோ அவ்வுறுப்பினரது பதவிக்காலத்தின் முடிவுறுகின்ற காலப்பகுதிக்குப் பதவி வகித்தல் வேண்டும்.

(7) பதவியை வறிதாக்குகின்றவரான சபையின் நியமிக்கப்பட்ட உறுப்பினர் எவரும், (3) ஆம் உட்பிரிவின்கீழ் அவர் பதவியினின்று அகற்றப்பட்டிருந்தாலன்றி, மீள நியமிக்கப்படுவதற்குத் தகவுடையவராதல் வேண்டும்.

(8) சபையின் நியமிக்கப்பட்ட உறுப்பினர் ஒருவர்—

(அ) சபையின் உறுப்பாண்மையினின்று அவர் பதவிதுறப்பதன்மேல் அல்லது அகற்றப்படுவதன்மேல் ; அல்லது

(ஆ) திரைப்படக் கூட்டுத்தாபனத்தின் பணிப்பாளரொருவராக அவர் பதவிதுறப்பதன்மேல் அல்லது அகற்றப்படுவதன்மேல் ; அல்லது

(இ) சபையின் உறுப்பினரொருவராக அல்லது திரைப்படக் கூட்டுத்தாபனத்தின் பணிப்பாளரொருவராக அவரது பதவிக்காலம் முடிவுறுவதன்மேல்,

அவரது பதவியை வறிதாக்கியுள்ளாரெனக் கருதப்படுதல் வேண்டும்.

(9) சபைத் தவிசாளர் சபையின் எல்லாக் கூட்டங்களுக்கும் தலைமை தாங்குதல் வேண்டும். ஏதேனும் கூட்டத்தில் தவிசாளர் சமுகமில்லாதிருப்பின், கூட்டத்திற் சமுகமாயிருப்பவரான (2) ஆம் உட்பிரிவின் (இ) (i) என்னும் பந்தியில் குறிப்பிடு செய்யப்படும் உறுப்பினர் அல்லது மாற்றுன உறுப்பினர் தலைமைதாங்குதல் வேண்டும்.

(10) சபையின் ஏதேனும் கூட்டத்திற்குத் தலைமைதாங்கும் ஆள் அவரது சொந்த வாக்குடன் அறுதியிடும் வாக்கொன்றையும் உடையவராதல் வேண்டும்.

(11) சபையின் உறுப்பினர்களிடையே ஏதேனும் அபிப்பிராய பேதம் இருக்கும்பட்சத்தில் பெரும்பான்மையோரின் முடிபு பிணிப்பதும் பயனுறுவதும் ஆதல் வேண்டும்.

(12) சபையின் கூட்டமொன்றிற்கான கூட்ட நடப்பெண் நான்கு உறுப்பினர்களாதல் வேண்டும்.

(13) பன்னிரண்டாம் உட்பிரிவின் ஏற்பாடுகளுக்கமைய, சபையானது, அதன் கூட்டங்கள் தொடர்பிலான நடவடிக்கைமுறை அத்துடன் அத்தகைய கூட்டங்களில் அலுவலின் நடைமுறை என்பவற்றை ஒழுங்குபடுத்தலாம்.

(14) சபை, அதன் உறுப்பினர்களிடையே வெற்றிடமொன்றிருப்பது எவ்வாறிருப்பினும், செயலாற்றலாம்.

(15) நிதி என்னும் விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சரின் ஒருப்பாட்டுடன் அமைச்சரால் தீர்மானிக்கப்படக்கூடியவாறான சபையின் எல்லா உறுப்பினர்களுக்கும் அல்லது உறுப்பினர்கள் எவருக்கும் அத்தகைய ஊதியமும், படிகளும் அத்துடன் வேறு செலவுகளும் செலுத்தப்படலாம்.

நம்பிக்கைப் பொறுப்பின் இலச்சினை.

4. நம்பிக்கைப் பொறுப்பின் இலச்சினையானது—

(அ) சபையால் காலத்துக்குக்காலம் தீர்மானிக்கப்படக்கூடியவாறான அத்தகைய ஆட்களின் கட்டுக்காப்பில் இருத்தல் வேண்டும்;

(ஆ) சபையால் தீர்மானிக்கப்படக்கூடியவாறான அத்தகைய முறையில் மாற்றப்படலாம்; அத்துடன்

(இ) சபையின் அனுமதியுடனும் சபையின் இரு உறுப்பினர்களது முன்னிலையிலும் அன்றி எச்சாதனத்திலும் அல்லது ஆவணத்திலும் பொறிக்கப்படுதலாகாது;

அவர்கள் தாம் சமுகமளித்திருந்தமைக்கு அடையாளமாக அச்சாதனத்தில் அல்லது ஆவணத்தில் கையொப்பமிடுதல் வேண்டும்.

நம்பிக்கைப் பொறுப்பின் குறிக்கோள்கள்.

5. நம்பிக்கைப் பொறுப்பின் குறிக்கோள்கள் பின்வருவனவாயிருத்தல் வேண்டும் :—

(1) உதவித்தொகை கொடுத்தும் ஓய்வூதியத் திட்டங்களை முறைப்படுத்தல், நலன்புரி நிதியங்களையும் சேமிப்பு நிதியங்களையும் சேமிப்புகள் அல்லது சிக்கனச் சங்கங்களையும் அத்துடன் திரைப்படக் கலைஞர்களுக்கும் தொழில்நுட்பவியலாளர்களுக்கும் துணைபுரிவதற்கென வகுக்கப்பட்ட வேறு எந்த செயற்றிட்டங்களையும் தாபித்தல்;

(2) சபைக்கு விண்ணப்பம் செய்யப்படுவதன்மேல், தகவுடைய திரைப்படக் கலைஞர் அல்லது தொழில்நுட்பவியலாளர் ஒருவருக்கு—

(அ) அவர் ஐம்பது வயதை அடைவதன்மீது, அவர் அவ்வயதை அடைந்தபின்னர் அவரது வாழ்க்கைத் தொழிலில் தொடர்ந்து ஈடுபட்டாலென்ன அல்லாவிட்டாலென்ன ஓர் ஓய்வூதியத்தை, படிகளை, பணக்கொடையை, விடைப்பு வசதிகளை அல்லது வேறு எந்த நலன்களை;

(ஆ) அவர் ஏதேனும் உடல் அல்லது மனச் சக்தியின்மையின்கீழ் இருப்பதோடு அவரது வாழ்க்கைத் தொழிலில் ஈடுபடஇயலாதவராயிருப்பாராயின் ஏதேனும் நிதியுதவி

வழங்குதல்;

(3) தகவுடைய திரைப்படக் கலைஞர் அல்லது தொழில்நுட்பவியலாளர் ஒருவர் இறக்கும் பட்சத்தில், சபைக்கு விண்ணப்பம் செய்யப்படுவதன்மேல்—

(அ) ஈமச் சடங்குச் செலவுகள் தொடர்பில் ஏதேனும் நிதியுதவியை;

(ஆ) தகவுடைய அந்தத் திரைப்படக் கலைஞரின் அல்லது தொழில்நுட்பவியலாளரின் வாழ்க்கைத் துணைக்கு, பெற்றோருக்கு அல்லது பராயமடையாத பிள்ளைக்கு நிதியுதவியை அல்லது வேறு உதவியை

வழங்குதல்.

நம்பிக்கைப் பொறுப்பின் தத்துவங்களும் கடமைகளும் பணிகளும்.

**6.** (1) சபையானது நம்பிக்கைப்பொறுப்பின் பெயரில் இச்சட்டத்தினதும் வேறேதேனும் எழுத்திலான சட்டத்தினதும் ஏற்பாடுகளுக்கமைய, நம்பிக்கைப்பொறுப்பின் குறிக்கோள்களை நிறைவேற்றுவதற்கு அவசியமான அல்லது உகந்ததான அல்லது அதற்கு இடைநேர்விளைவான அத்தகைய எல்லாச் செயல்களையும் செய்வதற்குத் தத்துவமுடையதாதல் வேண்டும்.

(2) ஓராம் உட்பிரிவினால் அளிக்கப்பட்ட தத்துவங்களின் பொதுமைக்குப் பங்கமின்றி, சபையானது பின்வரும் தத்துவங்களையும் பணிகளையும் பிரயோகிக்கலாம் அத்துடன் நிறைவேற்றலாம் :—

(அ) உள்ளூர் மூலங்களிலிருந்தாயினுஞ்சரி, வெளிநாட்டு மூலங்களிலிருந்தாயினுஞ்சரி பணமாகவோ அல்லது பொருளாகவோ நிதிகளைத் திரட்டுதல் மானியக் கொடைகளை, கொடைகளை அல்லது நன்கொடைகளைப் பெறுதல் ;

(ஆ) அசைவுள்ள அல்லது அசைவற்ற ஆதனத்தைக் கொள்ளுதல், வைத்திருத்தல், அதனைக் குத்தகைக்கு எடுத்தல் அல்லது கொடுத்தல், ஈடுவைத்தல், அடைவு வைத்தல், விற்றல் அல்லது வேறுவகையாக கையுதிர்த்தல் ;

(இ) நம்பிக்கைப் பொறுப்பின் தத்துவங்களையும், பணிகளையும் கடமைகளையும் பிரயோகிப்பதற்கும் புரிவதற்கும் நிறைவேற்றுவதற்கும் அத்துடன் குறிக்கோள்களை கொண்டு நடாத்துவதற்கு அவசியமாகக்கூடியவாறான அத்தகைய எல்லா ஒப்பந்தங்களையும் உடன்படிக்கைகளையும் நேரடியாகவோ அல்லது அதன்பொருட்டு சபையால் எழுத்தில் அதிகாரமளிக்கப்பட்ட அலுவலர்கள், சேவையாளர்கள் அல்லது முகவர்கள் மூலமாகச் செய்துகொள்ளுதல் அல்லது நிறைவேற்றுதல் ;

(ஈ) இச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கமைய நம்பிக்கைப்பொறுப்பின் அலுவலர்களையும் சேவையாளர்களையும் நியமித்தலும் தொழிலுக்கமர்த்துதலும் அவர்களுக்கு ஊதியம் வழங்குதலும் அத்துடன் அந்நியமனம், பதவியுயர்வு, ஊதியம், அதன் ஊழியர்களது ஒழுக்காற்றுக் கட்டுப்பாடு அத்துடன் அவர்களுக்கு வீடும் வேறு நலன்கள் என்பன பற்றிய விதிகளை ஆக்குதலும் ;

(உ) சபையின் தற்றுணிபின்பேரில் நம்பிக்கைப்பொறுப்பிற்கு உரித்தான நிதிகளை, நம்பிக்கைப்பொறுப்பின் பணத்தை முதலீடு செய்வதற்கான சட்டத்தால் அதிகாரமளிக்கப்பட்டவாறான அத்தகைய எவையேனும் முதலீடுகளில் முதலீடு செய்தலும், சபையின் தற்றுணிபின்பேரில் அத்தகைய முதலீடுகளை மீட்டழைத்தலும் மீளமுதலீடு செய்தலும், வேறுபடுத்தலும் அத்துடன் அத்தகைய முதலீடுகளினின்றும் திரளும் வருமானத்தைச் சேகரித்தலும் ;

(ஊ) நம்பிக்கைப்பொறுப்பின் நிருவாகம் தொடர்புபட்ட எல்லாக் கருமங்கள் தொடர்பிலும் விதிகளை ஆக்குதல் ; அத்துடன்

(எ) நம்பிக்கைப்பொறுப்பின் குறிக்கோள்களை எய்துதற்கு அவசியமானவையென அல்லது உகந்தவையென சபை கருதக்கூடியவாறான அத்தகைய வேறு செயல்களையும் விடயங்களையும் செய்தல்.

**தேசியத் திரைப்படக் கூட்டுத்தாபன நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்தைத் தாபித்தல்.**

7. (1) (இதனகத்துப்பின்னர் "நிதியம்" எனக் குறிப்பிடு செய்யப்படும்) தேசிய திரைப்படக் கூட்டுத்தாபன நம்பிக்கைப்பொறுப்பு நிதியம் என அழைக்கப்படும் நிதியமொன்று தாபிக்கப்படுதல் வேண்டும்.

(2) சபையானது, நிதியத்தை முகாமை செய்வதற்கும், கட்டுப்படுத்துவதற்கும், தொழிற்படுத்துவதற்குமான தத்துவமுடையதாதல் வேண்டும்.

(3) இச்சட்டம் தொடங்கும் தேதியின்பின்னர் வசதியாகக்கூடிய வாறான விரைவில், திரைப்படக் கூட்டுத்தாபனம் தொடக்க மானியக் கொடையொன்றாக நிதியத்திற்கு பத்துலட்சம் ரூபாவைக் கொடுப்பனவு செய்தல்வேண்டும்.

(4) மூன்றும் உட்பிரிவிற் குறிப்பிடு செய்யப்பட்டுள்ள தொடக்க மானியக்கொடை எந்த ஆண்டில் அளிக்கப்படுகின்றதோ அந்த ஆண்டை அடுத்துறும் ஆண்டு தொடக்கம் நிதியத்துக்கு ஆண்டு மானியக்கொடையொன்றை அளிப்பது திரைப்படக் கூட்டுத்தாபனத்துக்குச் சட்டமுறையானதாதல் வேண்டும்.

**நிதியத்திற்குச் செலுத்தப்படும் கொடுப்பனவுகள்.**

8. பின்வருவன நிதியத்துட் செலுத்தப்படுதல் வேண்டும்—

(அ) ஆறும் பிரிவின் (2) ஆம் உட்பிரிவின் (அ) என்னும் பந்தியின்கீழ் திரட்டப்பட்ட ஏதேனும் நிதி அல்லது பெறப்பட்ட எவையேனும் மானியக்கொடைகள், கொடைகள் அல்லது நன்கொடைகள் அல்லது தேறிப்பெறப்பட்ட அல்லது சேகரிக்கப்பட்ட பணங்கள்;

(ஆ) ஏழாம் பிரிவின்கீழ் திரைப்படக் கூட்டுத்தாபனத்தால் அளிக்கப்பட்ட தொடக்க மானியக்கொடையும் அத்துடன் ஆண்டுக்குரிய மானியக்கொடைகளும்; அத்துடன்

(இ) முதலீடுகளிலிருந்து பெறப்படும் ஏதேனும் வருமானம் அல்லது நம்பிக்கைப்பொறுப்புக்கு வருமதியாகவுள்ள வேறு வரவுகள்.

**நிதியத்திலிருந்து செய்யப்படும் கொடுப்பனவுகள்.**

9. பின்வருவன நிதியத்திலிருந்து செலுத்தப்படுதல் வேண்டும் :—

(அ) நம்பிக்கைப்பொறுப்பைத் தொழிற்படுத்துதல், தாபித்தல், பேணுதல் என்பவற்றிற்கு அவசியமான செலவுகள் ;

(ஆ) அலுவலர்களுக்கும், சேவையாளர்களுக்கும் வேறு ஊழியர்களுக்குமான சம்பளக் கொடுப்பனவுகள், அத்துடன்

(இ) நம்பிக்கைப்பொறுப்பின் குறிக்கோள்களை நிறைவேற்றும் நோக்கத்திற்கு அவசியமானவையெனச் சபையினால் அங்கீகரிக்கப்படுகின்றவாறான அத்தகைய வேறெல்லாக் கொடுப்பனவுகளும்.

**நம்பிக்கைப் பொறுப்பின் நிதியாண்டு.**

10. நம்பிக்கைப்பொறுப்பின் நிதியாண்டு பஞ்சாங்க ஆண்டாதல் வேண்டும்

**கணக்குகளும் கணக்காய்வும்.**

11. (1) சபையானது, நம்பிக்கைப்பொறுப்பின் வருமானமும் செலவினமும் அத்துடன் வேறெல்லாக் கொடுக்கல் வாங்கல்களும் பற்றிய முறையான கணக்குப் புத்தகங்களை வைப்பித்தல் வேண்டும்.

(2) சபையானது, ஒவ்வோராண்டிலும் திசெம்பர் முப்பத்தோராம் நாளன்று உள்ளவாறு அதன் கணக்குப் புத்தகங்களைச் சமநிலைப்படுத்தச் செய்வித்தல் வேண்டும் என்பதுடன் அடுத்த ஆண்டு மார்ச்சு மாதம் முப்பத்தோராம் நாளுக்கு முன்னர் முதலாவதாகக் குறிப்பிடப்பட்ட தேதி வரை கணக்கிடப்பட்ட வருமானம், செலவினக் கணக்கொன்றையும் நம்பிக்கைப்பொறுப்பின் சொத்துக்களையும் பொறுப்புக்களையும் பற்றிய பொழிப்பொன்று அடங்கிய ஐந்தொகையொன்றையும் தயாரிக்கச் செய்வித்தல் வேண்டும்.

(3) வருமான, செலவினக் கணக்கும் ஐந்தொகையும் அவற்றை ஒப்பமிடுவதற்கெனச் சபையால் நிறைவேற்றப்பட்ட தீர்மானமொன்றினால் அதிகாரமளிக்கப்பட்ட சபையின் இரு உறுப்பினர்களால் ஒப்பமிடப்படுதல் வேண்டும்.

(4) அரசியலமைப்பின் 154 ஆம் உறுப்புரைக்கிணங்க கணக்காய்வாளர் தலைமையதிபதி நம்பிக்கைப்பொறுப்பின் கணக்குகளை ஒவ்வோராண்டும் கணக்காய்வு செய்தல் வேண்டும்.

**இச்சட்டத்தின் கீழ் அல்லது சபையின் பணிப்பின்மீது செய்யப்பட்ட செயலுக்கான பாதுகாப்பு.**

12. (1) இச்சட்டத்தின் நோக்கங்களுக்கென நியமிக்கப்பட்ட சபையின் எவரேனும் உறுப்பினருக்கெதிராக அல்லது நம்பிக்கைப்பொறுப்பின் எவரேனும் அலுவலருக்கு, சேவையாளருக்கு அல்லது முகவருக்கு எதிராக, இச்சட்டத்தின்கீழ் அல்லது சபையின் பணிப்பின்மீது அவரால் நல்லெண்ணத்துடன் புரியப்படும் அல்லது புரியப்பட்டதாகக் கொள்ளப்படும் செயல் எதற்காகவும் தொடர்ச்சி அல்லது குற்றவழக்கு எதுவும் தொடரப்படுதலாகாது.

(2) ஏதேனும் நீதிமன்றத்தின் முன்பாக, நம்பிக்கைப்பொறுப்பால் அல்லது நம்பிக்கைப்பொறுப்பிற்கு எதிராகக் கொண்டுவரப்பட்ட தொடர்ச்சி அல்லது குற்றவழக்கு எதிலும் நம்பிக்கைப்பொறுப்பினால் உறப்பட்ட எவையேனும் செலவுகள் நம்பிக்கைப்பொறுப்பின் நிதியங்களிலிருந்து செலுத்தப்படுதல் வேண்டும் என்பதுடன் ஏதேனும் அத்தகைய தொடர்ச்சியில் அல்லது குற்றவழக்கில் நம்பிக்கைப்பொறுப்பிற்குச் செலுத்தப்பட்ட அல்லது நம்பிக்கைப்பொறுப்பினால் அறவிடப்பட்ட எவையேனும் செலவுத்தொகைகள் நம்பிக்கைப்பொறுப்பின் நிதியத்திற்கு வரவு வைக்கப்படுதல் வேண்டும்.

(3) ஏதேனும் நீதிமன்றத்தின் முன்பாக, (1) ஆம் உட்பிரிவில் குறிப்பிடு செய்யப்படுகின்றவரான ஆளுக்கெதிராக, இச்சட்டத்தின்கீழ் அல்லது சபையின் பணிப்பின்மீது அவரால் புரியப்படும் அல்லது புரியப்பட்டதாகக் கொள்ளப்படும் ஏதேனும் செயல் தொடர்பில் கொண்டுவரப்பட்ட ஏதேனும் தொடர்ச்சியில் அல்லது குற்றவழக்கில் அவரால் உறப்பட்ட எவையேனும் செலவுகள், அத்தகைய செயல் நல்லெண்ணத்துடன் புரியப்பட்டதென நீதிமன்றம் தீர்த்தால் அத்தகைய செலவுகள் அத்தகைய தொடர்ச்சியில் அல்லது குற்றவழக்கில் அவரால் அறவிடப்பட்டாலன்றி, நம்பிக்கைப்பொறுப்பின் நிதியங்களிலிருந்து செலுத்தப்படுதல் வேண்டும்.

சபையின் உறுப்பினரொருவராது அல்லது நம்பிக்கைப் பொறுப்பின் அலுவலர்கள் முதலானோரது உடலுக்கு எதிராகவோ அவர்களது ஆதனத்துக்கு எதிராகவோ எழுத்தாணை எதுவும் வழங்கப்படுதலாகாது.

13. (1) நம்பிக்கைப் பொறுப்பிற்கு எதிராகக் கொண்டுவரப்படும் வழக்கு எதிலும் சபையின் எவரேனும் உறுப்பினருக்கு எதிராக அல்லது நம்பிக்கைப்பொறுப்பின் எவரேனும் அலுவலருக்கு அல்லது சேவையாளருக்கு எதிராக, உடலுக்கு அல்லது ஆதனத்துக்கு எதிராக எழுத்தாணை எதுவும் வழங்கப்படுதலாகாது.

(2) ஏதேனும் நீதிமன்றத்தின் முன்பாக, நம்பிக்கைப் பொறுப்பால் அல்லது நம்பிக்கைப் பொறுப்பிற்கு எதிராக கொண்டுவரப்பட்ட ஆட்சேபி அல்லது குற்றவழக்கு எதிலும் நம்பிக்கைப் பொறுப்பினால் உறப்பட்ட எவையேனும் செலவுகள் நம்பிக்கைப் பொறுப்பின் நிதியங்களிலிருந்து செலுத்தப்படல் வேண்டும் என்பதுடன் ஏதேனும் அத்தகைய ஆட்சேபியில் அல்லது குற்றவழக்கில் நம்பிக்கைப் பொறுப்பிற்குச் செலுத்தப்பட்ட அல்லது நம்பிக்கைப் பொறுப்பினால் அறவிடப்பட்ட எவையேனும் செலவுத்தொகைகள் நம்பிக்கைப் பொறுப்பின் நிதியத்திற்கு வரவு வைக்கப்படுதல் வேண்டும்.

நம்பிக்கைப் பொறுப்பின் அலுவலர்களும் சேவையாளர்களும் தண்டனைச் சட்டக் கோவையின் கீழ் பகிரங்க சேவையாளர்களாகக் கருதப்படுதல்.

14. தண்டனைச் சட்டக்கோவையின் கருத்தெல்லைக்குட்படவும், அதன் நோக்கங்களுக்காகவும் நம்பிக்கைப்பொறுப்பின் எல்லா அலுவலர்களும் சேவையாளர்களும் பகிரங்க சேவையாளர்களாகக் கருதப்படுதல் வேண்டும்.

இலஞ்சச் சட்டத்தின் கருத்தெல்லைக்குட்பட்ட நம்பிக்கைப் பொறுப்பானது அட்டவணைப் படுத்தப்பட்ட நிறுவனம் எனக் கருதப்படுதல்.

15. நம்பிக்கைப்பொறுப்பானது, இலஞ்சச் சட்டத்தின் கருத்தெல்லைக்குட்பட, அட்டவணைப்படுத்தப்பட்ட நிறுவனமொன்றாகக் கருதப்படுதல் வேண்டும் என்பதுடன், அதற்கிணங்க அச்சட்டத்தின் ஏற்பாடுகள் ஏற்புடையனவாதலும் வேண்டும்.

பொருள்கோடல்.

16. சந்தர்ப்பம் வேறு வகையாகத் தேவைப்படுத்தினாலன்றி, இச்சட்டத்தில்—

"தகவுடைய திரைப்படக் கலைஞர் அல்லது தொழில்நுட்பவியலாளர்" என்பது திரைப்படக் கலைஞர், அல்லது தொழில்நுட்பவியலாளர் ஒருவர் குறைந்தது எந்த மூன்று திரைப்படங்களின் தயாரிப்பின் பயனாக பத்தாண்டுகளுக்குக் குறையாத ஒரு காலப்பகுதியின்போது சிறப்புப் பாராட்டுக்களைச் சம்பாதித்திருக்கின்றாரோ அந்தத் திரைப்படங்களின் தயாரிப்பின் ஒப்பந்த அடிப்படையில் குறிப்பிட்டுள்ளவாறான (படைப்பியல் ஒளியமைப்புத்

தொழில் நுட்பவியலாளர் அல்லது பின்னணிப் பாடகர் தவிர்ந்த— இவர்களுக்கு இத்தேவைப்பாடு ஏற்புடையதாகாது) ஒரு திரைப்படக் கலைஞர் அல்லது தொழில்நுட்பவியலாளர் என்று பொருள்படும் ;

“திரைப்படக் கலைஞர் அல்லது தொழில்நுட்பவியலாளர்” என்பது இலங்கையில் திரைப்படத் தயாரிப்பில் நேரடியாக ஈடுபட்டிருந்தவரான அல்லது ஈடுபட்டிருக்கின்றவரான எவரேனும் நடிகரை, திரைப்பட இயக்குநரை, வசன கர்த்தாவை, பாடலாசிரியரை, இசையமைப்பாளரை பின்னணிப் பாடகரை, ஒப்பனைக் கலைஞரை, ஒலிய இயக்குநரை, நிழற்படக் கலைஞரை, தொகுப்பமைப்பாளர் அல்லது ஒளியமைப்புத் தொழிநுட்பவியலாளரை உள்ளடக்கும்.”

“திரைப்படக் கூட்டுத்தாபனம்” என்பது 1971 ஆம் ஆண்டின் 47 ஆம் இலக்க, தேசிய திரைப்படக் கூட்டுத்தாபனச் சட்டத்தின்கீழ் தாபிக்கப்பட்ட இலங்கைத் தேசிய திரைப்படக் கூட்டுத்தாபனம் என்று பொருள்படும்.

**பாராளுமன்றத்தின்** சட்டமூலங்களினதும் சட்டங்களினதும் வருடாந்த சந்தா (உள்நாடு) ரூபா 150 ; (வெளிநாடு) ரூபா 200 ஒவ்வோராண்டும் திசெம்பர் மாதம் 15 ஆந் தேதிக்கு முன் எதிர்வரும் **ஆண்டுக்கான** சந்தாப்பணம் அத்தியட்சர், அரசாங்க வெளியீட்டலுவலகம், த. பெ. இல. 500, கொழும்பு 1 என்ற விலாசத்திற்கு அனுப்பப்பட வேண்டும்.